**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அறிவிப்பு – கோடைக் கொண்டாட்டம் – சிறப்பு பயிற்சி முகாம் – அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித்[பக5(1)]துறை**

அரசாணை (நிலை) எண். 101 நாள் 03.06.2022

(திருவள்ளுவராண்டு 2053,
சுப கிருது வருடம், வைகாசி 20 )

படிக்க:-

பள்ளிக் கல்வி ஆணையரின் கடித எண்.019524/ எம்/ இ3/2022, நாள் 24.05.2022.

-----

**ஆணை :-**

2022-2023–ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் பொழுது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை அறிவித்துள்ளார்:-

**13. கோடைக் கொண்டாட்டம் - சிறப்புப் பயிற்சி முகாம் :-**

"மாணவர்களின் தனித்திறன்களை மெருகேற்றும் வகையிலும், கோடை விடுமுறையைப் பயனுள்ள வகையில் செலவழித்திடவும், கோடைக் கொண்டாட்ட சிறப்பு பயிற்சி முகாம்கள் மலை சுற்றுலாத் தளங்களில் நடத்தப்படும். பள்ளிப் பாடங்களைத் தவிர்த்து சூழலியல், தலைமைத்துவம், மனித உரிமை, சமூக நீதி, பெண்ணுரிமை மற்றும் எதிர்காலவியல் போன்ற பொருண்மைகளில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் பயிற்சிகள் அளிக்கப்படும்."

2. மேலே படிக்கப்பட்ட பள்ளிக் கல்வி ஆணையரின் கடிதத்தில், "**அறமுணர்ந்த மூதறிஞர்களின் நட்பைப் பெறும் வகை அறிந்து, அதனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்**" என்ற திருக்குறளின் பொருளுக்கேற்ப கற்றறிந்த பெருமக்களின் துணை கொண்டு பள்ளிச் சூழலில் இருந்து விடுபட்டு இயற்கையோடு

இயைந்த ஓர் அனுபவக் கல்வியை மாணாக்கர்களுக்கு அளிக்கும் நோக்கத்தின் அடிப்படையில், நீலகிரி மாவட்டத்தில் 5 நாட்கள் கோடை கொண்டாட்ட பயிற்சி முகாம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும் இச்சிறப்புப் பயிற்சி முகாமிற்கு அரசு பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு முடித்துள்ள மாணவர்களில் கல்வி, இலக்கியம், அறிவியல், விநாடி வினாப் போட்டிகளில் சிறந்து விளங்கும் 1250 மாணவர்களைத் தெரிவு செய்து அழைத்துச் செல்லத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும், மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வண்ணம் 25 மாணவர்களுக்கு ஒரு கருத்தாளர் / வழி நடத்துனர் என ஆசிரியர், முன்னாள் மாணவர், திட்ட மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் கொண்ட 50 நபர் குழுவையும் அழைத்துச் செல்லலாம் எனத் தெரிவித்து, மாணவர்கள் மற்றும் கருத்தாளர்களுக்கான பயணச் செலவு, உணவு, மதிப்பூதியம் உள்ளிட்ட செலவுகளுக்கென இந்த ஆண்டிற்கு ஒரு மையத்திற்கு ரூ.14,43,750/- வீதம் 5 மையங்களில் நடத்த ரூ.72,18,750/- (ரூபாய் எழுபத்து இரண்டு இலட்சத்து பதினெட்டாயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்)-ஐ நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

3. பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துருவினை ஏற்று, அரசு பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு முடித்துள்ள மாணவர்களில் கல்வி, இலக்கியம், அறிவியல், விநாடி வினாப் போட்டிகளில் சிறந்து விளங்கும் 1250 மாணவர்களைத் தெரிவு செய்து, நீலகிரி மாவட்டத்தில் 5 நாட்கள் கோடை கொண்டாட்ட பயிற்சி முகாம் நடத்த அனுமதியும் ஒரு மையத்திற்கு ரூ.14,43,750/- வீதம் 5 மையங்களில் நடத்த இவ்வாணையின் இணைப்பு-1-இல் குறிப்பிட்டுள்ளவாறு மொத்த செலவினம் ரூ.72,18,750/- (ரூபாய் எழுபத்து இரண்டு இலட்சத்து பதினெட்டாயிரத்து ஏழுநூற்று ஐம்பது மட்டும்) அனுமதியும், இணைப்பு-II முதல் இணைப்பு-IV வரை குறிப்பிட்டுள்ளவாறு நிகழ்ச்சியை நடத்தவும் அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. மேலும் இந்த சிறப்பு பயிற்சி வகுப்புகளில், தமிழர் பண்பாடு கலாச்சாரம் மற்றும் வரலாறு என்னும் பொருண்மையில் குறைந்தப்பட்சம் ஒரு பயிற்சி வகுப்பு நடத்த பள்ளிக் கல்வி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

4. மேலே பத்தி-3-இல் ஒப்பளிக்கப்பட்ட ரூ.72,18,750/-இல், ரூ.50,00,000/-ஐ (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் மீதத் தொகை ரூ.22,18,750/-ஐ தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழக நிதியிலிருந்து பெற்று செலவினம் மேற்கொள்வதற்கும், அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி-3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ரூ.50,00,000/- ம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் : -

"2202 - பொதுக்கல்வி - 02 இடைநிலைக் கல்வி – 001 – நெறிப்படுத்தலும் நிருவாகமும் - மாநிலச் செலவினங்கள் –AG– சிறந்த மாணவர்களை மெருகேற்றும் வகையில் கோடை கொண்டாட்ட சிறப்பு பயிற்சி

304- பயணச் செலவுகள் - 01 - சுற்றுப் பயணப்படிகள்.
(த.தொ.கு. 2202-02-001-AG-30401).
305 அலுவலக செலவுகள் – 02- ஏனைய சில்லறை செலவுகள்.
(த.தொ.கு. 2202-02-001-AG-30502).

6. மேலே பத்தி-3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கான நிதி ரூ.50,00,000/- ம் 2022-2023-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய ஒதுக்கீட்டினை எதிர்நோக்கி மேலே பத்தி – 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினம் மேற்கொள்வதற்கு பள்ளிக் கல்வி ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. இருப்பினும், சட்டமன்றத்தின் ஒப்புதலை பெறும்பொருட்டு ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி (SI) இச்செலவினம் 2022-23-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட வேண்டும். இச்செலவினத்திற்கான உரிய கருத்துருவினை 2022-23-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் மற்றும் துணை மதிப்பீடுகளில் (Supplementary Estimates 2022-23) சேர்க்கத்தக்க வகையில் உரிய விவரங்களுடன் நிதி(கல்வி-II/வ..செ.பொது-I)த் துறைக்கு அனுப்புமாறு பள்ளிக் கல்வி ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.240/ADS(GKT)/Edn-II/2022, நாள் 03.06.2022-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேட்டு எண் 315 (முன்னூற்று பதினைந்து).

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-6.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகம், சென்னை-6,
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் தனிச் செயலாளர், சென்னை-9.

**நகல்:**

நிதி(கல்வி-II / வ,செ,பொது-I/II/வ.வ-I)த் துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வி (வ.செ.)த் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
03/06/2022

## இணைப்பு-I

**அரசணை (நிலை) எண்.101, பள்ளிக் கல்வித்[பக5(1)]துறை, நாள் 03.06.2022**

**செலவினம்**

| வகை | தொகை | எண்ணிக்கை | நாட்கள் | மொத்த செலவினம |
|---|---|---|---|---|
| கருத்தாளர்களுக்கான இருவழிப் பயணச் செலவு & மதிப்பூதியம் | ரூ.12,500 | 4 | 5 | ரூ 2,50,000 |
| ஒருங்கிணைப்பாளர்களுக்கான மதிப்பூதியம் | ரூ.2,000 | 2 | NA | ரூ.4,000 |
| மையத்திலிருந்து இருமுனைச்செலவு (மாணவர்கள்) | ரூ.500 | 258 | 2 | ரூ.2,58,000 |
| சென்னையிலிருந்து மையத்திற்கு இருமுனைச் செலவு (ஆசிரியர்கள்) | ரூ.1,000 | 4 | 2 | ரூ.8,000 |
| உணவு மற்றும் தங்குமிடம் (மாணவர்கள் & ஆசிரியர்கள்) | ரூ.500 | 282 | 5 | ரூ.7,05,000 |
| மாணவர்களுக்கான உபகரணங்கள் | ரூ.500 | 250 | 1 | ரூ.1,25,000 |
| கற்றல் (பயிற்சி) உபகரணங்கள் | ரூ.100 | 250 | 1 | ரூ.25,000 |
| சில்லரை செலவினம் | | 5% | | ரூ.68,750 |
| **ஒரு மையத்திற்கான செலவினம்** | | | | **ரூ.14,43,750** |
| **5 மையங்களுக்கான மொத்த செலவினம்** (ருபாய் எழுபத்து இரண்டு இலட்சத்து பதினெட்டாயிரத்து எழநூற்று ஐம்பது மட்டும்)\ | | | | **ரூ.72,18,750** |

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்

## இணைப்பு-II

அரசணை (நிலை) எண்.101, பள்ளிக் கல்வித்[பக5(1)]துறை, நாள் 03 .06.2022

### பயிலரங்கச் செயல்பாடுகள்

| செயல்பாட்டின் வகை | விளக்கம் | விளைவுகள் |
|---|---|---|
| 1. உடற் பயிற்சி | மாணவர்கள் தினமும் காலை 6-7 மணி வரை உடற் பயிற்சியில் ஈடுபடுவர். | • சிறந்த ஆரோக்கியத்திற்காக சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை உருவாக்குதல். |
| 2. செய்தித் தாள் மற்றும் இதழ்கள் வாசித்தல் | மாணவர்கள் காலையில் படிக்க செய்தித் தாள்கள் மற்றும் இதழ்கள் வழங்கப்படும். | • நடப்பு நிகழ்வுகள் மற்றும் இலக்கியம் பற்றிய விழப்புணர்வு அதிகரித்தல் |
| 3. அறிமுகம் செய்து கொள்ளும் அமர்வுகள் | மாணவர்கள் சக மாணவர்களையும் கருத்தாளர்களையும் நன்கு அறிந்துகொள்ள அறிமுகம் செய்துகொள்ளும் அமர்வுகளில் பங்கேற்பார்கள். | • தொடர்பு கொள்ளும் திறனை மேம்படுத்துதல்<br>• பகிரப்பட்ட அனுபவங்கள் வழியாக புதிய நட்பை வளர்த்தல். |
| 4. குறும்படங்கள் | மாணவர்கள் குறும்படங்களைப் பார்த்தலும் அது குறித்து கலந்துரையாடலும் | • மேம்பட்ட விமர்சன சிந்தனை<br>• கலை பற்றிய புரிதல் |
| 5. உடல் மொழி (Mime) | மாணவர்களுக்கு உடல் மொழி சார்ந்த பயிற்சி அளித்தல் | • செயலை வெளிப்படுத்தும் திறன், உற்று நோக்கும் திறன் அதிகரித்தல் |
| 6. நடனம் | ஒவ்வொரு நாளும் நடனக் கலையில் மாணவர்களுக்கு நடனப் பயிற்றுநரால் பயிற்சி அளிக்கப்படும். | • கலையை வெளிப்படுத்தும் திறன்<br>• மூளைத் திறன் மேம்படுதல் |
| 7. அரங்க / மேடைச் செயல்பாடுகள் | தினமும் மாலை மாணவர்களுக்கு மேடை பயிற்சி அளிக்கப்படும் | • மேடை பயம் நீக்கி தன்னம்பிக்கை வளர்த்தல் |
| 8. இசை | ஆர்வமுள்ள மாணவர்களுக்கு இசை ஆசிரியர்களால் இசைப் பயிற்சி வழங்கப்படும். | • இசை ஆர்வத்தை தூண்டுதல்<br>• நேர்மறை சிந்தனைகளை அதிகரித்தல் |
| 9. கவிதை / கதை எழுதுதல் | ஆர்வமுள்ள மாணவர்கள் கதை மற்றும் கவிதை எழுதும் பயிற்சிப் பட்டறையில் பங்கேற்கச் செய்தல் | • மொழி ஆளுமைத் திறன் மற்றும் படைப்பாற்றல் திறன் மேம்படுத்துதல்<br>• கதை சொல்லுதல், எழுதும் திறன், கற்பனைத் திறன் மேம்படுத்துதல் |

| | | |
|---|---|---|
| 10. மென் திறன்கள் (Soft Skills) | மாணவர்களுக்கு கருத்துப் பரிமாற்றம் சார்ந்து பயிற்சி அளிக்கப்படும் | • தகவல் தொடர்பு, ஒத்துழைப்பு, படைப்பாற்றல் போன்ற திறன்களை மேம்படுத்தப்படுத்துதல் |
| 11. சமூகத் திறன்கள் (Social Skills) | மாணவர்களுக்கு பண்பாடு மற்றும் கலாச்சாரம், சுற்றுச் சூழலைப் புரிந்துகொள்வது, குழுச் செயல்பாடு சார்ந்து பயிற்சி அளிக்கப்படும் | • சமூகத்தில் நிகழும் பொதுவான பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் |
| 12. எதிர்கால திட்டம் | மாணவர்கள் தாங்கள் விருப்பப்பட்ட துறை வல்லுநர்களுடன் கலந்துரையாடுதல் | • பல்வேறு துறைகள் பற்றி அறிந்துகொள்ளுதல் <br> • மேற்படிப்பு சார்ந்த சுய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் |
| 13. இளம் அதிகாரிகள் சந்திப்பு | இளம் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் மற்றும் விவாதித்தல் | • ஊக்கம் மற்றும் தன்னம்பிக்கை மேம்படுத்துதல் |
| 14. வானியல் அறிதல் | தமிழ்நாடு அறிவியல் மன்றத்தில் அமைந்துள்ள தொலை நோக்கிகள் வாயிலாக விண்பொருள்களை காணுதல் | • இயற்பியல் மற்றும் வானியல் கருத்துக்கள் சார்ந்த கற்றல் அனுபவங்களைப் பெறுதல் |

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்
03/06/2022

## இணைப்பு-III

**அரசணை (நிலை) எண்.101, பள்ளிக் கல்வித்[பக5(1)]துறை, நாள் 03.06.2022**

**பயிற்சி கால அட்டவணை**

| நாள் | நேரம் | அமர்வின் தலைப்பு |
|---|---|---|
| நாள் 1 | 09.00 முப - 09.30 முப | தொடக்க விழா |
| நாள் 1 | 09.30 முப - 10.30 முப | அறிமுகப்படுத்துதல் |
| நாள் 1 | 10.30 முப - 11.00 முப | தேநீர் இடைவேளை |
| நாள் 1 | 11.00 முப- 12.30 பிப | அமர்வு 1 |
| நாள் 1 | 12.30 பிப - 01.30 பிப | மதிய உணவு இடைவேளை |
| நாள் 1 | 01.30 பிப - 03.30 பிப | கலை, இலக்கிய நிகழ்வுகள்-<br>அரங்க / மேடைச் செயல்பாடுகள் / உடல் மொழி வாயிலாக நடித்து காட்டுதல் / கதை சொல்லுதல் / கவிதை எழுதுதல் / நடனம் / இசை |
| நாள் 1 | 03.30 பிப - 04.00 பிப | தேநீர் இடைவேளை |
| நாள் 1 | 04.00 பிப - 05.30 பிப | அமர்வு 2 |
| நாள் 1 | 05.30 பிப - 07.00 பிப | தனித்துவமான செயல்பாடுகள் |
| நாள் 1 | 07.00 பிப - 08.30 பிப | இரவு உணவு இடைவேளை |
| நாள் 1 | 08.30 பிப - 10.00 பிப | வானியல் அறிதல் |
| நாள் 2 | 06.00 முப- 06.30 முப | தேநீர் இடைவேளை |
| நாள் 2 | 06.30 முப - 07.30 முப | நடைப் பயிற்சி |
| நாள் 2 | 07.30 முப- 08.30 முப | அன்றைய நிகழ்விற்கு தயாராகுதல் |
| நாள் 2 | 08.30 முப - 09.00 முப | காலை உணவு இடைவேளை |

| | | |
|---|---|---|
| நாள் 2 | 09.30 முப - 11.00 முப | அமர்வு 3 |
| நாள் 2 | 11.00 முப - 11.30 முப | தேநீர் இடைவேளை |
| நாள் 2 | 11.30 முப - 01.00 பிப | அமர்வு 4 |
| நாள் 2 | 01.00 பிப - 02.00 பிப | மதிய உணவு இடைவேளை |
| நாள் 2 | 02.00 பிப - 04.00 பிப | <u>கலை, இலக்கிய நிகழ்வுகள்-</u><br>அரங்க / மேடைச் செயல்பாடுகள் / உடல் மொழி வாயிலாக நடித்து காட்டுதல் / கதை சொல்லுதல் / கவிதை எழுதுதல் / நடனம் / இசை |
| நாள் 2 | 04.00 பிப - 04.30 பிப | தேநீர் இடைவேளை |
| நாள் 2 | 04.30 பிப - 06.00 பிப | இளம் அதிகாரிகள் அறிமுகம் / தனித்துவமான செயல்பாடுகள் |
| நாள் 2 | 06.00 பிப - 07.00 பிப | குறும்படம் |
| நாள் 2 | 07.00 பிப - 08.30 பிப | இரவு உணவு இடைவேளை |
| நாள் 2 | 08.30 பிப - 10.00 பிப | வானியல் அறிதல் |
| நாள் 3 | 06.00 முப- 06.30 முப | தேநீர் இடைவேளை |
| நாள் 3 | 06.30 முப - 07.30 முப | நடைப் பயிற்சி |
| நாள் 3 | 07.30 முப- 08.30 முப | அன்றைய நிகழ்விற்கு தயாராகுதல் |
| நாள் 3 | 08.30 முப - 09.00 முப | காலை உணவு இடைவேளை |
| நாள் 3 | 09.30 முப - 11.00 முப | அமர்வு 3 |
| நாள் 3 | 11.00 முப - 11.30 முப | தேநீர் இடைவேளை |
| நாள் 3 | 11.30 முப - 01.00 பிப | அமர்வு 4 |
| நாள் 3 | 01.00 பிப - 02.00 பிப | மதிய உணவு இடைவேளை |

| | | |
|---|---|---|
| நாள் 3 | 02.00 பிப - 04.00 பிப | <u>கலை, இலக்கிய நிகழ்வுகள்-</u><br>அரங்க / மேடைச் செயல்பாடுகள் / உடல் மொழி வாயிலாக நடித்து காட்டுதல் / கதை சொல்லுதல் / கவிதை எழுதுதல் / நடனம் / இசை |
| நாள் 3 | 04.00 பிப - 04.30 பிப | தேநீர் இடைவேளை |
| நாள் 3 | 04.30 பிப - 06.00 பிப | இளம் அதிகாரிகள் அறிமுகம் / தனித்துவமான செயல்பாடுகள் |
| நாள் 3 | 06.00 பிப - 07.00 பிப | குறும்படம் |
| நாள் 3 | 07.00 பிப - 08.30 பிப | இரவு உணவு இடைவேளை |
| நாள் 3 | 08.30 பிப - 10.00 பிப | வானியல் அறிதல் |
| நாள் 4 | 06.00 முப- 06.30 முப | தேநீர் இடைவேளை |
| நாள் 4 | 06.30 முப - 07.30 முப | நடைப் பயிற்சி |
| நாள் 4 | 07.30 முப- 08.30 முப | அன்றைய நிகழ்விற்கு தயாராகுதல் |
| நாள் 4 | 08.30 முப - 09.00 முப | காலை உணவு இடைவேளை |
| நாள் 4 | 09.30 முப - 11.00 முப | அமர்வு 3 |
| நாள் 4 | 11.00 முப - 11.30 முப | தேநீர் இடைவேளை |
| நாள் 4 | 11.30 முப - 01.00 பிப | அமர்வு 4 |
| நாள் 4 | 01.00 பிப - 02.00 பிப | மதிய உணவு இடைவேளை |
| நாள் 4 | 02.00 பிப - 04.00 பிப | <u>கலை, இலக்கிய நிகழ்வுகள்-</u><br>அரங்க / மேடைச் செயல்பாடுகள் / உடல் மொழி வாயிலாக நடித்து காட்டுதல் / கதை சொல்லுதல் / கவிதை எழுதுதல் / நடனம் / இசை |
| நாள் 4 | 04.00 பிப - 04.30 பிப | தேநீர் இடைவேளை |

| | | |
|---|---|---|
| நாள் 4 | 04.30 பிப - 06.00 பிப | இளம் அதிகாரிகள் அறிமுகம் / தனித்துவமான செயல்பாடுகள் |
| நாள் 4 | 06.00 பிப - 07.00 பிப | குறும்படம் |
| நாள் 4 | 07.00 பிப - 08.30 பிப | இரவு உணவு இடைவேளை |
| நாள் 4 | 08.30 பிப - 10.00 பிப | வானியல் அறிதல் |
| நாள் 5 | 06.00முப- 06.30 முப | தேநீர் இடைவேளை |
| நாள் 5 | 06.30 முப - 07.30முப | நடைப் பயிற்சி |
| நாள் 5 | 07.30முப - 08.30 முப | அன்றைய நிகழ்விற்கு தயாராகுதல் |
| நாள் 5 | 08.30 முப - 09.00 முப | காலை உணவு இடைவேளை |
| நாள் 5 | 9.30 முப - 11.00 முப | அமர்வு 7 |
| நாள் 5 | 11.00 முப - 11.30 முப | தேநீர் இடைவேளை |
| நாள் 5 | 11.30 முப - 01.00 பிப | மாணவர்களின் அனுபவப் பகிர்வு |
| நாள் 5 | 01.00பிப – 02.00பிப | மதிய உணவு இடைவேளை |
| நாள் 5 | 02.00பிப – 04.00பிப | நிறைவு விழா |

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

(ஒப்பம்)
பிரிவு அலுவலர்
03/6/2022

## இணைப்பு-IV

அரசணை (நிலை) எண்.101, பள்ளிக் கல்வித்[பக5(1)]துறை, நாள் 03.06.2022

### மாணவர்கள் தங்குமிடம் மற்றும் கருத்தாளர் / ஆசிரியர் – பாதுகாவலர் விவரப் பட்டியல்

| மையம் | மாணவர்களின் எண்ணிக்கை | திட்ட மேலாண்மைக் குழு | ஆசிரியர்கள் | | முன்னாள் மாணவர்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| CSI Engineering College,Ketti, The Nilgiris - 643215 | 250 | 2 | 2 | 2 | 2 | 2 |
| Laid Law Memorial School,Ketti, The Nilgiris - 643215 | 250 | 2 | 2 | 2 | 2 | 2 |
| JSS Public School, Udhagamandalam, TheNilgiris - 643004 | 250 | 2 | 2 | 2 | 2 | 2 |
| St.Antony's HSS Coonoor,The Nilgiris - 643101. | 250 | 2 | 2 | 2 | 2 | 2 |
| St.Joseph's AI Boys HSS,Coonoor, The Nilgiris -643101 | 250 | 2 | 2 | 2 | 2 | 2 |
| Total | 1250 | 10 | 10 | 10 | 10 | 10 |

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்
03/06/2022